**கோவிட் -19 பற்றிய புது தகவல்கள்: ப்ராம்ப்ட்டன் நீதிமன்றம் ஜூலை 6 ஆம் தேதி திறக்கவிருக்கிறது,**

**நீர் தெளிப்பான் பூங்கா மேடைகள் வேலை செய்யும் நேரம் நீட்டிக்கப்பட்டது**

ப்ராம்ப்ட்டன், ON (ஜூலை 6, 2020) – ப்ராம்ப்ட்டன் நகரை மீண்டும் திறப்பது மற்றும் மீட்சி பெறுவதற்கான திட்டத்தின் ஒரு அங்கமாக, ஜூலை 6 ஆம் தேதி பிரதேச குற்றங்களுக்கான ப்ராம்ப்ட்டன் நீதிமன்றம் திறக்கப்படவிருக்கிறது, மற்றும் நீர் தெளிப்பான் பூங்கா மேடைகள் திறந்திருக்கும் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

நகர நிர்வாகமானது சமுதாயத்தின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பினை பெரிதும் கருத்தில் கொள்கிறது, மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபடியே இருக்கும்.

**நீதிமன்றம்**

ஒன்ட்டேரியோ நீதிமன்றத்தின் கீழாக, எண் 5 ரே லாஸன் புலிவார்டு- இல் அமைந்திருக்கின்ற குற்றங்களுக்கான பிரதேச நீதிமன்றம் ஜூலை 6 ஆம் தேதி திறக்கவிருக்கிறது.

நீதிமன்ற வளாகத்திற்கு வருபவர்கள் அறிவிப்பு பலகைகளில் இடுகையிடப்பட்ட அனைத்துக் குறிகளையும் வழிமுறைகளையும் பின்பற்ற வேண்டும். உள்நுழைவதற்கென மட்டுமே ஒதுக்கப்பட்ட ஒரு-வழிப்பாதை நுழைவு கதவு இருக்கும், அங்கு வருகையாளர்கள் ஒரு பாதுகாப்பு காவலரால் வரவேற்கப்படுவார்கள். பார்வையாளர்கள் நுழைவதற்கு முன் அறிவிப்பு பலகைகளில் காட்சிக்கு வைக்கப்பட்ட COVID-19 தொற்றுப்பரவலைத் தடுக்க தமக்குத்தாமே என்ன செய்துகொள்ள வேண்டும் என்ற கேள்விகளை மதிப்பாய்வு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். உள்ளே நுழைந்தவுடன் கை சுத்திகரிப்பு திரவம் வழங்கப்படும். வருகையாளர்கள் தங்கள் வரிசைக்கிரமத்திற்கான சீட்டினைப் பெறுவதற்கு தகவல் கவுன்ட்டரை அணுகலாம்.

வரிசையில் நிற்பவர்களின் எண்ணிக்கை வரம்பினை அடைந்துவிட்டால், வருகையாளர்கள் தங்கள் மொபைல் தொலைபெசி எண்ணைக் கொடுத்து, உரைச் செய்தி வழியாக வரிசைக்கிரம எண்ணைப் அதில் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுவார்கள். கட்டிடத்திற்குள் நுழைவதற்கென அறிவுறுத்தும் உரைச் செய்தி வரும் வரை அவர்கள் வெளியே காத்திருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுவார்கள். தரையில் பல வண்ணங்களில் குறியிடப்பட்ட அடையாளங்கள், பார்வையாளர்களை கட்டிடத்தின் வெவ்வேறு சேவை பகுதிகளுக்கு செல்வதற்கான வழியைக் காட்டும்.

பிரதேச குற்றவியல் சட்ட விஷயங்கள்/வழக்குகள் அனைத்துமே, 2020 ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 11 ஆம் தேதி வரை ஒத்திவைக்கப்படும் என்பதை அறியவும். இந்த அறிவிக்கையின் ஒரு பிரதி ஒன்ட்டேரியோ நீதிமன்ற வலைத்தளத்தில் இல் கிடைக்கப்பெறுகிறது.

**நீர் தெளிப்பான் பூங்கா மேடைகள்**

BRAMPTON Service and Information Update

ஜூலை 6 ஆம் தேதி துவங்கி நீர் தெளிப்பான் பூங்கா மேடைகள் திறந்திருக்கும் நேரம் நீட்டிக்கப்படுகிறது. ப்ராம்ப்ட்டன் நகரில் இருக்கின்ற இந்த நீர் தெளிப்பான் பூங்கா மேடைகள் காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை என்பதற்கு பதிலாக, காலநிலை அனுமதிக்கும் பட்சத்தில், காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை திறந்திருக்கும். இந்த நீர் தெளிப்பான் பூங்கா மேடைகள் அமைந்திருக்கும் இடங்களுக்கான பட்டியலைக் காண வருகை புரியவும்: www.brampton.ca/recreation.

**கோவிட்-19 பாதுகாப்பு நடவடிக்கைகள்**

உடல்ரீதியான சமூகவிலகலை ஒவ்வொருவரும் பேணி வர வேண்டும் என பீல் ப்ப்ளிக் ஹெல்த் அமைப்பும் ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமும் வலியுறுத்துகின்றன. உங்கள் கைகளை குறைந்தது 20 நொடிகளாவது அடிக்கடி தேய்த்துக் கழுவுவதன் மூலம் கைகளைச் சுகாதாரமாக வைத்துக்கொள்ளுகின்ற பழக்கம் ஏற்படுத்திக்கொள்ள உறுதி கொள்ளுங்கள், மற்றும் எங்கு சென்றாலும் ஆல்கஹால் அடிப்படையிலான கை சுத்திகரிப்பியை உபயோகியுங்கள். இருமும்போதும் தும்மலின்போது ஒரு டிஷ்யூ பேப்பரைக் கொண்டோ அல்லது முகத்தை முழங்கைகளில் புதைத்தபடியோ அதைச் செய்யுங்கள் மற்றும் அதன் பின்னர் உங்கள் கைகளைக் கழுவிக்கொள்ளுங்கள்.

உங்களுக்கு உடல் நலமில்லாதது போல நீங்கள் உணர்ந்தால், தயவு செய்து நீதிமன்றத்திற்கோ அல்லது நீர் தெளிப்பான் பூங்கா மேடைகள் இருக்கும் இடங்களுக்கோ செல்ல வேண்டாம்.